1969 மார்ச் 1]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். கும்பகோணத்தில், எள்ளுக்குட்டை பகுதி என வழங்கப்படுகிற 166 எக்கர் பரப்பளவுள்ள நன்செய் நிலம் காவிரி ஆற்று நீர்க்கசிவாலும், ஓதநீராலும் வடிகால் வசதி இல்லாததாலும் பாதிக்கப்பட்டுள்ளது. முற் பகல் 9–30

திரு. நா. காசிராமன் : இந்த நிலங்கள் பாதிக்கப்பட்டதற்குக் காரணம் அவைகளுக்கு வடிகாலாகப் பயன்பட்டு வந்த வாய்க்கால் தூர்ந்து போய் விட்டது. அதில் ரிவெட்மெண்ட் கட்டவேண்டுமென்று கேட்டு அந்த நகரசபை ரூ. 1,40,000 சர்க்காருக்கு கட்டி மூன்று ஆண்டுகளாகியும் இந்த வேலை முடிவுபெறுமலிருப்பதால் நீர்த்தேக்கம் ஏற்பட்டு உணவு உற்பத்திப் பாதிப்பும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு விரைவில் முடிவு காண அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரி ஆற்று நீர்க் கசிவையும், ஓத நீரையும் வெளியேற்றுவதற்காக மேற்படி செயற் குறிப்பில் வகை செய்யப்பட்டுள்ளது. 3,200 அடியில் இதுவரை 1,970 அடி நீளத்திற்கு தேப்பெருமாநல்லூர் வேலை முடிவுற்றிருக்கிறது. 30—9—69க் குள் வேலை பூர்த்தியாகிவிடும்.

பேட்டைவாய்த் தலையருகிலுள்ள பாலம்

* 125—வினு : **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி-கரூர் நெடுஞ்சாலையில் பேட்டைவாய்த் தலைக்கு மேல் புறம் உள்ள பாலம் போக்குவரத்திற்கு இடையூருக இருந்து வருவது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதே னும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம். திருச்சி, கரூர் நெடுஞ்சாலையில் பேட்டைவாய்த்தலைக்கு அருகில் உள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்தும் வேலைக்கு நிதி ஒதுக்குமாறு அரசினருக்கு பரிந்துரைத்து, வடதிருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றம் 26—8—67 தேதி அன்று நடந்த கூட்டத்தில் ஒரு தீர்மானம், நிறைவேற்றியுள்ளது.

(இ) தற்போது நிதி நிலை நெருக்கடி காரணமாக, மேற்படி பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆயினும் எதிர்கால திட்டங்களில் மேற்படி வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மேற்படி பாலத்தில் இரு பக்கங் களிலும் இரண்டு கோவில்கள் இருப்பதாகவும் ஆகவே அந்தக் கோவில் களை அகற்றக்கூடாது என்று பக்தர்கள் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் அரசுக்கு ஏதாவது செய்திவந்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய தகவல் ஒன்றும் தற்போது இல்லை.

Breach in Grand Anicut Canal.

* 126 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU A. M. RAJA :
THIRU K. CHEEMAICHAMY : } Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether it is a fact that a breach has occurred in the Grand Anicut Canal about three miles east of Budalur;